உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
S.C No.446/2021

பெயர் :மலைச்சாமி(அ.சா.1)
தகப்பனார் பெயர் :நடுவி
கணவர் பெயர் :
வயது :57
கிராமம் :பெரிய நாவினிப்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.02.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை யாரென்றே தெரியாது. சுமார் 7 – 8 ஆண்டுகளுக்கு முன்பு இரவு சுமார் 8.30 மணியளவில் மேலூர் சந்தைபேட்டையில் பஸ்சுக்காக நின்றுகொண்டிருந்த போது தகராறு நடந்தது அதில் என் மண்டையை உடைத்துவிட்டார்கள். யார் உடைத்தார்கள் என்று தெரியவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு அதில் உள்ள கைரேகை தன்னுடையது அல்ல என்று மறுக்கிறார். எனது மனைவி பெயர் அடக்கி. அடக்கி என்பவரை அசிங்கமாக பேசிஇது தொடர்பாக எதிரிகளை தாக்கியதாக எங்கள் மீது புகார் இருந்தது என்றால் இல்லை. அவ்வாறு புகார் கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் ராசியாகிவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 13.07.2017அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் வேலையை முடித்துவிட்டு தவமணி என்பவரும், நானும் வீட்டிற்கு செல்லும் போது மேலூர் சந்தைபேட்டை பஸ் ஸ்டாப் அருகே நின்றுகொண்டிருந்த போது TN59 AS 1427என்ற ஆட்டோவில் வந்த ஆஜர் எதிரிகள் கையில் மூங்கில் கட்டையுடனும் இறங்கி என்னை கொலை செய்யவேண்டுமென்று

அசிங்கமாக பேசி என்னை தாக்கியதாகவும், தலையில் 1ம்எதிரி அரிவாளால் வெட்டியதாகவும் 2வது எதிரி கத்தியால் மார்பில் குத்தியதாகவும், 3வது எதிரி கட்டையால் என்னை தாக்கியதாகவும், இதனால் எனக்கு வலதுகை ஆட்காட்டி விரலில் காயம் ஏற்பட்டதாகவும், 4வது எதிரி என்னை கத்தியால் மார்பில் குத்தியதாகவும்,ஆஜர் 5ம்எதிரி கட்டையால் என்னை அடித்ததாகவும் புகார் கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் ராசியாகி கொண்டு போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.20 20:18:32 +0530

Assistant Sessions Judge

Melur